22nd January 1965]

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஆந்திர அரசாங்கத்தைச் சேர்ந்த பஸ்கள் நம் ராஜ்யத்தில் எத்தனை ரூட்டுகளில் சென்று கொண்டிருக்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியாகக் கேள்வி வேண்டும்.

அரசாங்க பஸ்களின் கட்டணம்

* 64 **கேள்வி—திரு. மு. கருணாநிதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் ஓடிக்கொண்டிருக்கும் அரசாங்க பஸ்களின் கட்டணத்தைக் குறைக்கக்கோரி, அண்மையில் அரசாங்கத்திற்கு ஏதேனும் விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் இம்மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) விண்ணப்பதாரர்கள் இதைக் குறித்து மேலும் விவரங்கள் அனுப்பிய பின்னர், இது ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, புதிதாக ரூட்டை ஏற்படுத்தி யிருக்கிறார்களே, அதிலே எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கு 5 பைசா உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் டிக்கெட் நிர்ணயிக்கும் போது 75, 80 என்பதாக வைக்கப்படுகிறது. இதனால் ஒரு ரூபாய் ஐந்து பைசாவரக்கூடிய டிக்கெட்டுக்கு ஒரு ரூபாய் இருபத்தைந்து பைசாவாகிற நிலை இருக்கிறது. இதை அரசாங்கம் பரிசீலனை செய்தார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைப் பற்றித் தனியாக எழுதி அனுப்பினால் விவரங்களை எல்லாம் சேகரித்துப் பரிசீலனை செய்ய முடியும்.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்போது அவர்களிடம் இருந்து வந்துள்ள விண்ணப்பத்தில் இருக்கிற விவரங்கள் என்ன ? சில முக்கிய அம்சங்களைப் பற்றியாவது சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்களுடைய விண்ணப்பத்தில் முக்கியமானது ஸ்டேஜ்கள் சரியாக அமையவில்லை, அதை ஒழுங்காக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்பது. எப்படி அமைக்க வேண்டும் என்கிற விவரங்களையே அவர்களிடம் திரும்பக் கேட்டு இருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த அரசாங்கத்திற்கு வந்திருக்கக் கூடிய முறையீடுகளில் அடங்கியுள்ள முக்கியமான கோரிக்கைகள் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முக்கியமான கோரிக்கை பஸ் சார்ஜை குறைக்க வேண்டும் என்பதுதான். அதை ஏற்பதற்கு இல்லையென்று சொல்லிவிட்டோம். அடுத்த கோரிக்கை

ஸ்டேஜை மாற்றி அமைக்க வேண்டும் என்பது எவ்வாறு மாற்றி அமைக்க வேண்டும் என்கிற யோசனையை, அவர்களிடத்திலேயே கேட்டு இருக்கிறேம். அடுத்தது, மாணவர்களுக்குச் சலுகை அளிக்க வேண்டும் என்பது. அதை முன்னமேயே கொடுத்து விட்டோம்.

திரு. ஜே. மாதா கவுடர்: இப்போது வசூலிக்கிற கட்டணப்படி சென்னை நகர பஸ்களின் வருமானம் கூடியிருக்கிறதா? குறைந்து இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இன்னும் முப்பது நாட்கள் பொறுத்திருந்தால் போதும். எல்லா விவரங்களும் கொடுக்கப்படும். இதுபற்றியெல்லாம் டிமாண்டு வரும்போது ஆலோசிக்கலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் எக்ஸ்பிரஸ் பஸ்களில் இரண்டு டிக்கெட் கொடுக்கிறார்களே, ஒன்று எக்ஸ்பிரஸ் சார்ஜ் என்று தனி, ஒன்று சாதாரண டிகெட். ஒரு ஊருக்கு ஒரே டிக்கெட்டாகக் கொடுப்பதில் சர்க்காருக்கு நஷ்டம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. எழுதி அனுப்பினல் பரிசீலிக்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, இப்போது தனிப்பட்ட முதலாளிகள் ஓட்டுகிற பஸ்களின் கட்டணத்தைவிட சர்க்கார் பஸ்களுக்கு கட்டணத்தை ஏற்றிவிட்டார்கள, இதற்குக் காரணம் தனியார் பஸ்களைவிட சர்க்கார் பஸ் துறையில் நிர்வாக குறை இருக்கிறது என்பதுதானே?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினருக்கு விவரம் தெரியாது என்று நினைக்கிறேன். நமக்கு முன்பே தனியார் பஸ்களின் கட்டணத்தை ஏற்றிவிட்டார்கள். இப்போது சர்க்காருடைய கட்டணத்தைவிட அதிகமாக ஏற்றுவதற்கு கோரிக்கை போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

கிருஷ்ணகிரி—சென்னை (அரசாங்க பஸ்கள்)

* 65. **கேள்வி—திரு. ம. கமலநாதன்:**
திரு. எம். வி. கரிவேங்கடம்:
திரு. சி. கோதண்டராம பாகவதர்: } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிருஷ்ணகிரிக்கும், சென்னைக்கும் இடையே புதிதாக அரசினர் எக்ஸ்பிரஸ் பஸ் விடும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes.

தொழில் துறைப் பள்ளிகள்

* 66. **கேள்வி—புலவர் கா. கோவிந்தன்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தொழில் துறைப் படிப்புக்களையே கொண்ட தொழில் துறை **உயர்நிலைப் பள்ளிகள்** (Technical Schools) அமைக்குமாறு